


# கொலைகளின் தலைநகரமாக மாறுகிறதா

# கோவை?

**10 நாட்களில் 4 உயிர்கள் பறிப்பு தவெக அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் குற்றவாளிகளுக்குப் பயமில்லாத சூழல் நிலவுகிறது!**


**நவீன், அமுதன், அஸ்வின், சாந்தி இவர்கள் வெறும் பெயர்கள் அல்ல, சீர்குலைந்த சட்ட ஒழுங்கின் சாட்சிகள்!**










## இமாச்சலில் கனமழை:

# உயிரிழப்பு 70 ஆக அதிகரிப்பு!

சிம்லா,ஆக.15-

இமாச்சல பிரதேச மாநிலத்தில் கடந்த 43 நாட்களாக பெய்து வரும் மழையினால் ஏற்பட்ட விபத்துகளில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளது. சுமார் ரூ.910 கோடி மதிப்பிலான பொதுச் சொத்துகள் சேதமடைந்துள்ளன.

அங்கு கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்து வருகிறது. மழை தொடர்பான விபத்துகளில் சிக்கி இதுவரை 70 பேர் உயிரிழந்துள்ளதாக, மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதில், அதிகபட்சமாக லஹால் மற்றும் ஸ்பிட்டி ஆகிய மாவட்டங்களில் தலா 14 பேரும், காங்க்ரா மாவட்டத்தில் 12 பேரும் உயிரிழந்துள்ளனர். இதில், அதிகபட்சமாக பொதுப்பணித் துறைக்கு ரூ.686 கோடி, மின் துறைக்கு ரூ.203 கோடி உட்பட ரூ.910 கோடி பொதுச் சொத்துகள் சேதமடைந்துள்ளன. என்எச்154, 21 ஆகிய 2 தேசிய நெடுஞ்சாலைகளும் பாதிப்படைந்துள்ளன.

## எத்தனையோ விஞ்ஞானிகள் முயற்சி செய்தும் ஏவுகணைகளைச் செலுத்த முடியவில்லை!

# யாருமே நெருங்க முடியாத நிலையிலேதான் 'சூரியன்' இருக்கிறார்!

## சட்டப் பேரவையில் – முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் – வேளாண் துறை அமைச்சருக்கு பதிலடி!



**சென்னை, ஆக.15-**

**சட்டப்பேரவையில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் 'யாருமே நெருங்க முடியாத நிலையிலே தான் சூரியன் இருக்கிறார்' என்றும், எத்தனையோ விஞ்ஞானிகள் முயற்சி செய்தும் அங்கே ஏவுகணைகளை செலுத்த முடியவில்லை' என்றும் வேளாண் துறை அமைச்சருக்கு பதிலடி கொடுத்துள்ளார்.**

சட்டப் பேரவையில் (12.06.2026) அன்று வேளாண் துறை பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்து, வேளாண் துறை அமைச்சர் பேசுகையில், 'அனைவருக்கும் சூரியனால் வியர்த்தது, நீங்கள் வந்த பிறகு சூரியனுக்கே வியர்த்தது' என்று பேசினார்.

உடனே முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் எழுந்து, 'பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட நெடிய விளக்கம் சொன்னார், பொறுமையோடு நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். அவருடைய பதிலுரை முடிவுரையில் சூரியனுக்கே வியர்த்தது என்ற ஒரு கருத்தை இங்கே சொல்லி இருக்கிறார்.

இதுவரை யாருமே நெருங்க முடியாத நிலையிலே தான் சூரியன் இருக்கிறார் என்பதையும் (பலத்த மேஜையைத் தட்டும் ஒலி) எத்தனையோ விஞ்ஞானிகள் முயற்சி செய்தும் அங்கே ஏவுகணைகளை செலுத்த முடியவில்லை என்பதையும் நான் இங்கே சுட்டி காட்டி அமர்கிறேன்' என்று பதிலடி கொடுத்து பேசினார்.



திருப்பூர் பல்லடம் முத்தூர் IDPL திட்டத்தில் விவசாய நிலங்கள் பாதிக்கப்படாத வகையில் மாற்று வழித்தடங்களை ஆய்வு செய்யக் கோரியும், மேலும் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு 100% சந்தை மதிப்பு இழப்பீடு வழங்கவும், விவசாயிகள்–அதிகாரிகள் இணைந்து கள ஆய்வு மேற்கொள்ள வலியுறுத்தி கோரிக்கை மனுவினை துணை குடியரசுத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச் செல்வன் தேனி, கே.ஈஸ்வரசாமி பொள்ளாச்சி, முனைவை கணபதி ப.ராஜ்குமார் கோவை, முரசொலி தஞ்சாவூர், மாதேஸ்வரன் நாமக்கல் ஆகியோர் உள்ளனர்.

## தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் –

# பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது!

## மக்களவையில் க.செல்வம் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!



புதுடெல்லி, ஆக. 15–

தமிழகத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA), 2013 மற்றும் பொது விநியோகத் திட்டம் (PDS) செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் பதிலளித்துள்ளது.

ஒன்றிய அரசின் பதிலின்படி, 16.07.2026 நிலவரப்படி தமிழகத்தில் 362.23 லட்சம் பயனாளிகள் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இலவச உணவுத்தானியங்களைப் பெற்று வருகின்றனர். தமிழகத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 364.70 லட்சம் பயனாளிகள் என்ற இலக்கில் இது குறிப்பிடத்தக்க அளவாகும்.

மேலும், தமிழகத்தில் செயல்பட்டு வரும் நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை 2024ஆம் ஆண்டில் 34,805 ஆகவும், 2025ஆம் ஆண்டில் 34,890 ஆகவும் இருந்துள்ளது.

தமிழகத்திற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டுதோறும் 36.77 லட்சம் டன் உணவுத்தானியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தும் வகையில், ரேஷன் அட்டைகளின் 100% தரவுத்தள மயமாக்கல் மற்றும் ஆதார் இணைப்பு, ஆன்லைன் உணவுத்தானிய ஒதுக்கீடு, விநியோகச் சங்கிலி கணினிமயமாக்கல், ePoSகருவிகள், உயிர்முறை அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 'ஒரே நாடு – ஒரே குடும்ப அட்டை' (ONORC) திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் ரேஷன் அட்டை எடுத்துச் செல்லும் வசதியும், SMARTPDS மற்றும் நிகழ்நேர தரவு கண்காணிப்பு உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பயனாளிகளின் குறைகளை விரைவாகத் தீர்க்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட குறைதீர் அலுவலர் (DGRO) நியமிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் செயல்பாட்டைக் கண்காணிக்க மாநில உணவு ஆணையமும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் திட்டத்தின் செயல்பாட்டை ஆழமாக மதிப்பிடுவதற்கும் 2025–26ஆம் ஆண்டில் பிரதமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா (PMGKAY) திட்டத்தின் ஒருங்கிணைந்த மதிப்பீட்டை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருவண்ணாமலை வழியாகச் செல்லும்

# தேசிய நெடுஞ்சாலையை 4 வழிச் சாலையாக தரம் உயர்த்துவீர்!

## ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியிடம் – சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 15 -

திருவண்ணாமலை வழியாக செல்லும் திண்டிவனம் - கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் - விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிச்சாலைகளாக தரம் உயர்த்த வேண்டும். என ஒன்றிய அமைச்சரிடம் சி. என். அண்ணாதுரை எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து, சி.என். அண்ணாதுரை எம்.பி. தெரிவித்ததாவது;

திருவண்ணாமலைக்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை இதுவரை எப்போதும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது. இனிவரும் காலங்களில், இதைவிட பல மடங்கு பக்தர்கள் வருகை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. அதனால் இந்நகருக்கான வாகன போக்குவரத்தும் அதிகரித்துள்ளன.

எனவே திருவண்ணாமலை நகருக்கான பிரதான சாலைகளை நான்கு வழிச்சாலைகளாக தரம் உயர்த்துவது அவசியமாகியிருக்கிறது. அதன்படி, கடந்த திராவிட மாடல் ஆட்சியில முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆணைப்படி, முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு முயற்சியால் திருவண்ணாமலையை இணைக்கும் திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, அரூர் செல்லும் மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தும் விரிவுபடுத்தப்பட்டன. அதனால் அந்த சாலைகளில் வாகன போக்குவரத்து அதிகரித்துள்ளது.

விபத்துகள் தவிர்க்கப்பட்டுள்ளது. பக்தர்களின் பாதுகாப்பான மற்றும் விரைவான பயணம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் திருவண்ணாமலை வழியாக செல்லும் திண்டிவனம் - கிருஷ்ணகிரி மற்றும் வேலூர்-விழுப்புரம் இடையிலான தேசிய நெடுஞ்சாலைகளையும் நான்கு வழிச்சாலைகளாக தரம் உயர்த்துவது அவசிமாகியிருக்கிறது. திண்டிவனம் - கிருஷ்ணகிரி இடையிலான 182 கி.மீ சாலை 7 மீட்டரில் இருந்து 10 மீட்டராக விரிவுபடுத்தும் பணி, பல்வேறு சவால்களை கடந்து நிறைவேற்றப்பட்டது. ஆனாலும், தற்போதுள்ள போக்குவரத்துக்கு அந்த சாலை போதுமானதாக இல்லை. அதேபோல், ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் திருவண்ணாமலை வருகின்றனர்.

எனவே அந்த மாநில பக்தர்கள் பயன்படுத்தும் வேலூர் - விழுப்புரம் சாலையை நான்கு வழிச்சாலையாக உயர்த்துவதும் அவசியமாகும். அதன் மூலம், தென் மாவட்டங்களில் இருந்து திருவண்ணாமலை வழியாக திருப்பதிக்கு செல்லும் பக்தர்களும் வார்கள். பயன்பெறு எனவே, இது தொடர்பாக ஒன்றிய சாலை போக்குவரத்துத்துறை நிதின்கட்கரியை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்திருக்கிறேன். ஆன்மிக நகரான திருவண்ணாமலையின் சிறப்புகளையும், அங்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறித்தும் அவரிடம் விளக்கியிருக்கிறேன்.

எனவே, திண்டிவனம் கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் விழுப்புரம் சாலைகளை நான்கு வழிசாலையாக தரம் உயர்த்துவது தொடர்பாக. விரிவான திட்ட அறிக்கை (டி.பி.ஆர்) தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் அவர் தெரிவித்திருக்கிறார். இப்பணிகளை போராடி பெறுவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துகளில்

# இறந்த விலங்குகளின் உடல்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி கேள்வி!



புதுடெல்லி, ஆக.15–

தேசிய நெடுஞ்சாலைகளில் (NHs) வனவிலங்குகள் மற்றும் கைவிடப்பட்ட விலங்குகளின் நடமாட்டத்தால் விபத்துகள் ஏற்பட்டு, அதனால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் அகால மரணம் நிகழ்கிறதா அவ்வாறெனில், இத்தகைய விலங்குகளின் நடமாட்டத்தால் தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்பட்ட விபத்துகளின் விவரங்கள் என்ன?

இத்தகைய விலங்கு களின் உடல்கள் தேசிய நெடுஞ்சாலைகளிலேயே கிடக்கின்றனவா? அவற்றின் உடல் பாகங்கள் சாலைகளில் சிதறிக் கிடக்கின்றனவா? அல்லது வாகனங்களுக்கு அடியில் நசுக்கப்படுகின்றனவா? அவ்வா றெனில், தேசிய நெடுஞ்சாலைகளிலிருந்து இத்தகைய விலங்குகளின் உடல்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்று பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பினார்.

இதற்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை ஒன்றிய அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரி அளித்த பதில் வருமாறு :

31.07.2026 அன்று EDAR இணையதளத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் விலங்குகள் சம்பந்தப்பட்ட மொத்தம் 1,055 விபத்துகள் பதிவாகியுள்ளன, இவற்றால் 435 மனிதர்களும் 1,938 விலங்குகளும் உயிரிழந்துள்ளன. விபத்துகளில் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புடைய விலங்கு களின் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து வடிவமைப்பு விவரங்களின் பாதுகாப்புத் தணிக்கையை உறுதி செய்வதற்கான வழிமுறைகள், தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கான ஒப்பந்த உடன்படிக்கையில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், உகந்த அளவிலான சேவையை பராமரிக்கும் வகையில், இத்தகைய விலங்குகளின் உடல்களைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அகற்றுமாறும் ஒப்பந்ததாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்து ஓட்டத்தைப் பராமரிக்க விலங்குகளின் உடல்கள் உடனடியாக அகற்றப்படுகின்றன. வனவிலங்குகள் சம்பந்தப்பட்ட நிகழ்வு களில், சம்பந்தப்பட்ட மாநில வனத்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, சட்டரீதியான நடை முறைகளுக்கு இணங்க மேலதிக நடவடிக்கைகளுக்காக அந்த விலங்குகள் அல்லது அவற்றின் உடல்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) செயல்பாட்டு வரம்பிற்குள் 'சம்பவ' (Incident Management Teams) அமைக்கப்பட்டுள்ளதன் மூலம், நெடுஞ்சாலையில் உள்ள விலங்குகள் அல்லது விலங்குகளின் உடலங்களை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, இதன் வாயிலாகப் பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படுகிறது. மேலும், இக்குழுக்கள் காயமடைந்த விலங்குகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதோடு, அவற்றுக்குச் சிகிச்சையளிக்கவும் மேலதிகப் பராமரிப்பு வழங்கவும் உரிய அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைக்கும் பணிகளையும் மேற்கொள்கின்றன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் கூறினார்.



திருப்பூர் தெற்கு மாநகர், பெரிய கடை வீதி பகுதி, 50 வது வார்டில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில்வுள்ள குழந்தைகளுக்கு மத்திய மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் 50 சேர்களை வழங்கினார். இதில் மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராஜ், மாமன்ற உறுப்பினர் பெனாசிர் நசுருதீன், பகுதி கழக செயலாளர்கள் மு.க.உசேன், தம்பி பா.குமாரசாமி, ஒன்றிய கழக செயலாளர் சீனிவாசன், வார்டு செயலாளர் நாகர்ஜுன் ராஜகோபால் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.